**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**S.C. No: 92/19**

**Deposition of Witnesses for PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.ராஜகோபால் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **24.07.2024**

முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் குஜிலிபாறை வட்டம் ஆலம்பாடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2019ம ஆண்டு ஆவுடையார்கோவில் விஏஓ ஆக பணியாற்றியபோது 03.02.2019 அன்று சக்திவேல் என்பவரை கூலு என்ற காளிதாஸ், ராஜ பாண்டி, காசி விஸ்வநாதன், மாரிமுத்து ஆகிய 4 பேரும் சக்திவேல் என்பவரை கையால் அடித்து, மிதித்தும் கொலை செய்து விட்டார்கள். இது தொடர்பாக 04.02.2019 அன்று ஆவுடையார்கோவில் காவல் ஆய்வாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் முன்னிலையிலும் எனது கிராம உதவியாளர் முன்னிலையிலும் காசி விஸ்வநாதன் என்பவர் கொலை தொடர்பாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். மேலும் இது தொடர்பாக காளிதாஸ் என்பவர் காரைக்குடி நீதிமன்றத்தில் 04.03.2019ம் தேதி சரணடைந்து விசாரணைக்காக 14.03.19ம் தேதி ஆவுடையார்கோவில் காவல் ஆய்வாளர் முன்னிலையில் மேற்கண்ட கொலை தொடர்பாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். எதிரி காளிதாஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.4** ஆகவும், எதிரி காசிவிஸ்வநாதன் கொடுத்ததாக சொல்லப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி காளிதாஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**1,2 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜரில்லை.**

**3,4 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court read over to the witnesses and admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.